## பொலன்னறுவ மாநகர சபை
## பொலன்னறுவ மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 28 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 29 திகதியும் நகர பிதாவுக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடிய விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக பொலன்னறுவ மா நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க இந் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மா.ந.ச 10 பெறுதல் மற்றும் கொடுத்தல் பதிவேட்டின் பிரகாரம் காசு மீதி ரூபா 18,285,781 தொகை எனினும், அவை நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 18,720,588 தொகை என ரூபா 434,807 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அம் மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | 2018 ஜனவரி முதல் ஜுலை வரையான 07 மாதங்கள் தொடர்பான தமன்கடுவ பிரதேச சபை என்ற பெயரில் பெற்றிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் சிட்டையிடல் ரூபா 8,463,225 தொகையினால் மா நகர சபைக்கு உரித்தான நிலுவை நீதிமன்றத் தண்டப் பணத்தின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | மா நகர சபைக்கு உரித்தான நீதி மன்றத் தண்டப் பண நிலுவைத் தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2018 ஆம் ஆண்டிற்கான மா நகர சபைக்கு உரித்தான நீதிமன்றத் தண்டப்பண பெறுமதியை இனங்காணப்பதற்கு அலுவல்கள் திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் திசெம்பர் வரையான காலத்திற்கு உரிய நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானம் ரூபா 1,353,471 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2018 ஆண்டிற்கான நிலுவை வருமானம் குறைவாக பதிவு செய்யப்பட்டமை இனங் காணப்பட்டதுடன், 2020.12.31 திகதியில் முடிவடையும் கணக்கீட்டு ஆண்டின் போது சரி செய்கின்றேன். |
| (iv) | மீளாய்வாண்டு ஜூன் முதல் நவம்பர் வரை 06 மாதங்களுக்குரிய நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானம் ரூபா 512,333 தொகையினை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், திசெம்பர் மாதத்திற்கான நீதிமன்றத் தண்டப்பண நிலுவைத் தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். ஜூன் முதல் நவம்பர் வரையான கணக்குக் கூற்றுக்கள் 2020 ஆண்டின் போது கிடைத் திருந்ததுடன், திசெம்பர் கணக்குக் கூற்று கிடைத்திருக்கவில்லை. |
| (v) | மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதியை இனங் கண்டு சரியாக கணக்கீடு செய்யப் பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கணக்குக் கூற்றுக்கள் 2020 ஜூன் மாதம் கிடைத்துள்ளன. அவை பதிவு செய்யப்பட்டன. |
| (vi) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத் துக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்துக்காக ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கணக்காய்வுக் கட்டணத்துக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | பொலன்னறுவ சுற்றுவட்டத்துக்கு அண்மையில் அமைந்துள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 450,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | பொலன்னறுவ வர்த்தக கட்டிடத் தொகுதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 264,101,707 தொகை எனினும் இந்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக வடமத்திய பிரதான செயலாளர் அலுவலகத்தின் ஊடாக செலவிடப்பட்டிருந்த மொத்த பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்காமையால் கட்டிடத்தின் உண்மையான பெறுமதி நிதிக் கூற்றுக்களின் மூலம் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | முதல் கட்டம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த தனால் அதன் பெறுமதி பதிவு செய்யப்பட்டதுடன் 2020 இல் அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டமையினால் அதன் பெறுமதி ரூபா 660,125,829 தொகையினை ஆவணப் படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ix) | மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது பொலன்னறுவ மா நகர சபை அதிகார பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த சூரியஒளி வீதி விளக்கு முறைமையின் பெறுமதி ரூபா 8,475,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தொகுதி இலக்கம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதனால் பதிவு செய்வதற்கு தாமதமாகியதுடன் அதனை 2020 ஆண்டில் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (x) | மீளாய்வாண்டின் போது அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த குப்பைகளை முறைப் பிரகாரம் குவிக்கும் இடங்களின் பெறுமதி ரூபா 7,671,276 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் நிலையான சொத்துக் களின் கீழ் உட்படுத்து வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |
| (xi) | பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் சட்டங்களின் கீழ் பொலன்னறுவ மா நகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த காணி கட்டிடங்கள் மற்றும் சொத்து விடயங்கள் 05 இன் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதியை இனங் கண்டு நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டு சபை ஒன்று நியமனம் செய்து அடுத்த மாதத்துக்குள் கணிப்பீட்டினை பூர்த்தி செய்து நிலையான சொத்துப் பதிவேட்டினை நாளதுவரை ஆக்கி 2020 இறுதிக் கணக்குகளுக்கு எடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (xii) | உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2017 ஜூன் மாதம் வழங்கியிருந்த குப்பை அகற்றல் நிலையத்திலுள்ள ரூபா 9,939,115 தொகை பெறுமதியான உபகரணங்களின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நியமனம் செய்திருந்த கணப்பீட்டுச் சபையின் மூலம் அடுத்த மாதத் திற்குள் கணிப்பீட்டினை பூர்த்தி செய்து 2020 இறுதிக் கணக்குகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (xiii) | 2017 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான மாதங்கள் தொடர்பான நிலுவை நீதிமன்றத் தண்டப்பண தொகையில் பொலன்னறுவ மா நகர சபைக்கு உரித்தான ரூபா 2,573,110 இற்கான தொகையினை சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வழங்கியிருந்த பதில் பந்திக்குப் பொறுத்தமான தாக காணப்படவில்லை. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் படி காணி கட்டிடங்களின் பெறுமதி மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டின் படி காணி கட்டிடங்களின் பெறுமதி இடையே ரூபா 8,351,406 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது. | இணக்கஞ் செய்யப் பட்டு சரியான பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அதனை சரி செய்வ தற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 35,798,649 தொகை எனினும், அது நிதி நிலைமைக் கூற்றின் படி ரூபா 69,456,205 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 33,657,556 இற்கான இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களுடன் சரியான அட்டவணை கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். பிரதேச சபை மற்றும் நகர சபை இடையே விகிதாசாரத்தின் படி பங்கீடு செய்யப்பட்ட நிர்மாணவேலை கடன் கொடுத்தோர் மீதி தொடர்பான அறிக்கை யை பெற்றுக் கொள்ள முடியாமையினால் கடன்கொடுத்தோரை இனங்காண முடியாதுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி நிர்மாணவேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 30,124,998 தொகை எனினும் அது நிதி நிலைமைக் கூற்றின் படி ரூபா 54,034,762 தொகையாகக் காணப்பட்டமையால், ரூபா 23,909,764 இற்கான இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களுடன் சரியான அட்டவணை கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பிரதேச சபை மற்றும் நகர சபை இடையே விகிதாசாரப் படி பங்கீடு செய்யப்பட்ட நிர்மாண வேலைக் கடன்பட்டோர் மீதியுடன் தொடர்புடைய கடன்பட்டோரை இனங்காண முடியாதுள்ளது. |
| (iv) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்ட அட்டவணையின் படி பலவின கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,093,812 தொகை எனினும் அது நிதி நிலைமைக் கூற்றின் படி ரூபா 3,100,434 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 993,378 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களுடன் சரியான அட்டவணை கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையின் படி வருமான முற்பெறுவனவு மீதி ரூபா 1,301,997 தொகை எனினும் அது நிதி நிலைமைக் கூற்றின் படி ரூபா 4,480,626 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 3,178,629 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களுடன் சரியான அட்டவணை கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 807,701,344 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டு சபை ஒன்று நியமனம் செய்து கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேடு, பொருட் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகளை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா. | | | |
| (அ) மா நகர சபைக் கட்டளைச் சட்டம் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | பிரிவுகள் 35 மற்றும் 37 | | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பொலன்னறுவ மா நகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட சில பூங்காக்கள், வீதிகள், பொதுக் கட்டிடங்கள், காணிகள், வீதி விளக்குகள் ஆகிய காணிகள் மற்றும் ஏனைய ஆதனங்களை இனங்கண்டு சொத்துக்கள் பதிவேடு களில் உட்படுத்தி இருக்கவில்லை. | ஆதனங்களை இனங்கண்டு சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நிலையான சொத்துக் கள் கணிப்பீடு சபை ஒன்று 2020.05.22 திகதி நியமனம் செய்யப்பட்ட துடன் குறிப்பிட்டு கணிப்பீடு அடுத்த மாதத்திற்குள் பூர்த்தி செய்து நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | பிரிவு 247(அ) 2 | - | சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள 08 ஹோட்டல் களில் இருந்து 1 சதவீதம் ஆக அறவிடப்பட வேண்டிய கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டணம் அறவிடப்படாத ஹோட்டல்களுக்கு எழுத்துமூலம் மற்றும் தொலைபேசி மூலம் அறிவித்தல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. |
| (iii) | பிரிவு 253(1) | 2,626,375 | 148 கடையறைகளில் இருந்து ரூபா 2,626,375 தொகை கடை வாடகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு அல்லது அங்கீகரிக்கப் பட்ட துணை விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 பெப்ரவரி அளவில் கூடிய தொகை அளவு அறவிடப்பட்டுள்ளது. மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கொரோனா கொள்ளை நிலைமை காரணமாக நிலுவைத் தொகை மற்றும் மாதாந்த வாடகை அறவீடு செய்தல் ஆளுனரின் அங்கீகாரத்துடன் இடைநிறுத்தப்பட்டு ள்ளமையால் மீண்டும் அங்கீகாரம் பெற்ற பின்னர் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத் துவ அமைச்சின் இணைந்த சேவை சுற்றுநிருபம் 02/2017 | புலதிசி புத்தி மண்டப நூலக கணிப்பீட்டின் படி காணாமல் போனதென இனங்காணப் பட்ட 640 நூலகப் புத்தகங் களின் பெறுமதி ரூபா 42,484 தொகை மற்றும் நவநகர் நூலகத்தின் பெறுமதியினை இனங்காணப்படாத 122 புத்தகங்களின் குறைவு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நூலகப் புத்தகங்கள் காணாமல் போதல் மற்றும் குறைவாக இருத்தல் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருவதென கருணை யுடன் அறிவிக்கின்றேன். |
| (இ) | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மூலம் வெளியிடப்பட்டிருந்த 2017 திசெம்பர் 21 திகதிய 02/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை | 23 வாகனங்களின் உரிமை யை மா நகர சபையின் பேரில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | வாகனங்களின் உரிமையை உரித்தாக்கு வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரித்தாக்குவதற்குத் தேவையான ஆவணங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பொலன்னறுவ மா நகர சபையின் பெயரில் அவ் 23 வாகனங் களையும் பதிவு செய்வதற்கு இயலமாகும். |
| (ஈ) | வடமத்திய உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை<br>------------------------- | | | |
| (i) | என்சீபீ/எல்ஜீ/9/7/19 மற்றும் 1994.07.18 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை<br>--------------------------------- | | | |
| | பிரிவு 2 | 05 வருடங்களுக்கு ஒரு முறை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டிய துடன் சபைக்கு உரித்தான 151 கடையறைகளுக்காக 2007 ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவிடப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட காலத்தில் பெறுமதி மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | தற்காலிக பெறுமதி மதிப்பீடொன்று மேற் கொள்ளப்பட்டு 2020 ஆண்டு முதல் கடை வாடகை அதிகரித்து அறவிடப்பட்டதுடன், 2019.10.09 திகதிய கடிதத்தின் மூலம் கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்தல் தொடர்பாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 மார்ச் 25 திகதிய என்சீபீ/ எல்ஜீ/ஏசீ/01 கடிதம் | | | | |
| | விளக்கமளித்தல் இலக்கம் 01 | | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | காணி கட்டிடங் களுக்கான கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக் கள் கணிப்பீட்டு சபை நியமனம் செய்யப் பட்டுள்ளதுடன் அடுத்த மாதத்தில் கணிப்பீடு பூர்த்தி செய்து நிலையான சொத்துக் கள் பதிவேட்டினை நாளதுவரை ஆக்கு வதற்கும் மற்றும் 2020 இறுதிக் கணக்குகளில் உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | 2018 ஆகஸ்ட் 29 திகதிய 2086/15 இலக்கங் கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் | 748,720 | வர்த்தமானி அறிவித்தலு க்கு முரணாக 2018, 2019 ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 748,720 இற்கான படிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | படிகளை மீண்டும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020.01.14 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் செலுத்தப் பட்ட படிகள் 2020 ஜனவரி மாதம் முதல் 12 தவணைகளில் அங்கத்தவர்களிடம் அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2020 ஜனவரி முதல் சபைக் கொடுப்பனவில் மேற்கூறிய தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இறந்த பிரதி சபை முதல்வரிடம் அறவிடப் பட வேண்டிய தொகை அவரின் புதல்வர் ஒருவரினால் திருப்பிச் செலுத்துவதாக உறுதிப் பாடொன்று பெறப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளதுடன் அதனை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய கணக்கு மீதிகள் என காட்டப்பட்டுள்ள அறவிடப்பட வேண்டியுள்ள வேலைகளுக்காக ரூபா 2,699,839 தொகை நீண்ட காலம் முதல் கணக்குகளில் முன்கொண்டு வந்து காணப்படுவதுடன், அதனை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்கண்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். பொலன்னறுவ பிரதே சபையினால் அறவிடப்பட வேண்டிய தொகை ஒன்றாகும்.சரியான நிதி மூலவளத்தை இனங்கண்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய கணக்கு மீதி என காட்டப்பட்டுள்ள ரூபா 997,128 இற்கான பொது வழங்கள் கடன்கொடுத்தோர் மீதி ஒன்று நீண்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டு காணப்படுவதுடன், அதனை இனங்கண்டு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். பிரதே சபை மற்றும் நகர சபை இடையே விகிதாசாரப்படி பகிரப்பட வேண்டிய நிர்மாண வேலை கடன்கொடுத் தோர் மீதிக்காக அறிக்கைகள் கண்டு கொள்ள முடியாமல் இருப்பதனால் கடன்கொடுத்தோரை இனங்காண முடியாது. உள்ளூராட்சி கணக்காளருடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2018 ஆம் ஆண்டு முதல் சபைக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவை ஒரே தடவையில் செலுத்தும் பணம் (கீமணி) ரூபா 1,370,000 தொகை அறவீடு செய்யப் படாமல் நிலுவை வருமானம் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | நிலுவை தொகை யை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளதென கருணையுடன் அறிவிக்கின்றேன். |
| (ஈ) | பொலன்னறுவ பிரதேச சபையில் இருந்து 2018 ஆண்டு முதல் பெற வேண்டிய தொகை ரூபா 2,512,622 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகை யை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | பொலன்னறுவ பிரதேச சபையில் இருந்து பெற வேண்டிய தொகை ஒன்றாகும். |

| | | |
|---|---|---|
| | எடுக்க வேண்டும். | அட்டவணைகள் காணப்படவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,871,603 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 5,017,287 தொகை காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

**செயற்படாத வங்கிக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மா நகர சபை நிறுவுவதற்கு முன்னர் இருந்து காணப்பட்ட ரூபா 629,587 இற்கான மீதி ஒன்றுடன் 03 வங்கிக் கணக்குகள் செயற்படாமல் காணப்பட்டது. | ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். குறிப்பிட்ட கணக்குகளை முடிவுறுத்தி அவற்றில் உள்ள பணத்தை பெற்றுக் கொள்வதற்காக பொலன்னறுவ பிரதேச சபையின் பரிந்துரை மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

2019 ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 23,507,188 | 19,906,477 | 15,770,299 | 19,133,917 |
| (ii) | வாடகை | 18,823,558 | 7,706,622 | 6,503,056 | 2,626,375 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 7,200,000 | 5,127,000 | 5,127,000 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 13,000,000 | 10,116,550 | - | 40,015,201 |
| | மொத்தம் | 62,530,746 | 42,856,649 | 27,400,355 | 61,775,493 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டு ஆரம்ப நிலுவை வீதவரி வருமானம் ரூபா 12,233,286 தொகையும், 2019 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிட்டையிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 16,924,977 தொகையும் ஆக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 29,158,263 தொகையில் ரூபா 13,467,349 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் நிலுவை வருமானம் ரூபா 15,690,914 தொகை ஆக இருந்தது. | நிலுவை வீதவரி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விழித்தெழும் பொலன்னறுவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச மற்றும் பாதி அரச ஆதனங்களின் பாதைகளின் அபிவிருத்தி காரணமாக உடைத்து அகற்றப்பட்ட ஆதனங்களுக்கும் இதுவரை சிட்டையிடப்பட்டிருந்த காரணத்தினால் இந்த நிலுவை தொகையில் ஒரு பகுதி அறவிட முடியாத நிலைமையில் காணப்பட்டது. நிலுவையில் ரூபா 663,286 இற்கான தொகை ஒன்று பதிவழிப்பதற்கு பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் மேலும் உடைத்து அகற்றப்பட்ட ஆதனங்களை இனங்கண்டு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருடாந்தம் புதிதாக சேகரமாகும் வீதவரி அலகுகளை இனங்காண் பதற்கும், வீதவரி அறவிடக் கூடிய முன்னேற்றப்பட்ட பிரதேசங்களுக்காக வீதவரி விதிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி அறவிடப்படக் கூடிய பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு இறுதியில் தற்காலிக பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப் பட்டதுடன், பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு புதிதாக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளும் படி கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.3.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொலன்னறுவ சுற்றுவட்டத்தின் அண்மையில் உள்ள இருமாடி கட்டிடம் 2019 மார்ச் முதல் ரூபா 50,000 இற்கான மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டதன் மூலம், அறவிடப்பட வேண்டிய வாடகைத் தொகை மற்றும் பெறுமதி கூட்டிய வரி ரூபா 514,000 தொகை ஆகும். | நிலுவை வாடகைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ளது. இந்த நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வட மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 6,829,928 தொகை நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் காணப் படுவதாக நிதிக் கூற்றுக்களின் மூலம் காட்டப்பட்டிருந்த போதிலும் நிலுவை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் திருத்தப்பட வேண்டியுள்ளது. | கணக்காய்வுப் பரிந்துரையின் படி சரியான நிலுவைத் தொகையை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.12.05 திகதி அளவில் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 682,928 இற்கான கணக்குக் கூற்றுக்கள் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டு நவம்பர் வரையான கணக்குக் கூற்றுக் கள் 2020 ஆண்டில் கிடைத்துள்ளன. |
| (ஆ) | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 ஆண்டு இறுதியில் உள்ளவாறு இனங்கண்டிருந்த நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 33,185,273 தொகையாகக் காணப்பட்டதுடன், 2019 ஆண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குக் கூற்று 2020.06.18 திகதி கிடைத்துள்ளதுடன், நிலுவை ரூபா 4,555,650 தொகை ஆகும். |

### 2.3.5 புலப்படக்கூடிய முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வெளிக்களத்தில் சேகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தை அலுவலகத்திற்கு செலுத்தும் போது பற்றுச்சீட்டின் இரண்டாம் பிரதியை மாற்றம் செய்து சேகரிக்கப்பட்ட வருமானத்தை விட குறைவாக வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்த 04 சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதி ரூபா 8,750 தொகை ஆகும். | குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். | இதற்கான ஆரம்ப விசாரணை நடைபெறுகின்றது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆக்கப்பட்ட துணை விதிகளின் படி மா நகர சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளுக்காக மீளாய்வாண்டின் போது செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்தை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்றாக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்துகின்ற நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், அக் குறிக்கோள்களில் சபைக்கு உரிய | சபைக்கு உரிய குறிக்கோள்களை இனங்காணல், தரவு சேகரிக்கும் நடைமுறை | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| குறிக்கோள்களை சரியாக இனங்கண்டிருக்காததுடன், குறிக்கோள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகளுக்காக தரவுகள் சேகரிக்கும் நடைமுறை ஒன்று காணப்படவில்லை. 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் சபையினால் இனங்கண்டிருக்கவில்லை. இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக நிறுவனத்தின் பதவியணியினரை பயிற்றுவிக்கும் நடைமுறை ஒன்று மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொடர்பு கொள்ள வேண்டிய ஏனைய அரச நிறுவனங்களை இனங்கண்டிருக்கவில்லை. | தயாரித்தல், நிதி ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான தொடர்புடைய நிறுவனங்களை இனங்காணல் மேற்கொள்ளப்பட வேண்டும். | |

**(இ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 15,100,000 தொகை பெறுமதியான 24 அபிவிருத்திச் செயற்திட்டங்களின் மூலம் ரூபா 12,100,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த 22 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டின் படி செயற்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட பாதீட்டின் குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களின் அபிவிருத்தித் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) | சிரேஷ்ட மட்டத்திலுள்ள நகர ஆணையாளர், பிரதி நகர ஆணையாளர், சுகாதார வைத்திய உத்தியோகத்தர், மிருக வைத்திய உத்தியோகத்தர், நகர பொறியியலாளர் ஆகிய 05 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக இடையிடையே எமது அலுவலகத்தினால் மற்றும் வட மத்திய உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ii) | இரண்டாம் மட்டத்தை சேர்ந்த பல்வேறு பதவிகளில் 22 வெற்றிடங்கள் மற்றும் 03 பதவிகள் மிகையும் காணப்பட்டது. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக இடையிடையே எமது அலுவலகத்தின் மற்றும் வட மத்திய உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (iii) | ஆரம்ப மட்டத்தை சேர்ந்த பல்வேறு பதவிகளில் 23 வெற்றிடங்கள் மற்றும் 08 பதவிகளில் மிகையும் காணப்பட்டது, | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் மிகை களை முறைப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப மட்டத்தை சேர்ந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப் பதற்கும் 2019.08.27 திகதி பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி செயற்பட்ட போதிலும் நிதி அமைச்சுச் சுற்றறிக்கை இலக்கம் DMS/POLICY/Recruitments மற்றும் 2019/11/20 மற்றும் DMS/CIR/2020 மற்றும் 2020.02.05 திகதிய சுற்றறிக்கையின் படி ஆட்சேர்ப்புகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள காரணத் தினால் இந்த ஆட்சேர்ப்பு மேற் கொள்வதற்கு முடியாமல் போனது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 விளைவற்ற சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | டிரக்டர் கூட்டுத்தாபன கட்டடம் அமைந்துள்ள காணி, தேசத்துக்கு மகுடம் கடையறைகள் மற்றும் பொலன்னறுவ சிடிசென்டர் என்பன | ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். | டிரக்டர் கூட்டுத்தாபன கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரிமை தொடர்பாக சிக்கல் தீர்க்கப்பட்ட பின்னர் |

| | | | |
|---|---|---|---|
| | வியாபார தேவைகளுக்காக பயன் படுத்தப்படாமல் 06 மாதங்கள் முதல் 06 வருடங்கள் இடைப்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | | அபிவிருத்தி நடவடிக்கை மேற் கொள்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. தேசத்துக்கு மகுடம் கடையறை பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டது. திருத்துவதற்காக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுப்போம். பொலன்னறுவ சிடிசென்டர் தற்போது கேள்வி கோரப்பட்டு ள்ளதுடன், 2020 ஜுலை மாதம் பொது மக்களுக்காக திறப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மா நகர சபையின் குப்பை அகற்றும் நிலையத்தில் காணப்படும் ரூபா 10,743,000 தொகை பெறுமதி யான 03 இயந்திர உபகரணங்கள் 01 – 05 வரையான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். | செயற்படுத்துவதற்காக கிரயம் மிகவும் கூடுதலாக இருப்பதன் காரணமாக பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வட மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திடம் வினவி உள்ளேன். |

### 3.4 கருத்து வேறுபாட்டுத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மா நகர சபை உத்தியோகபூர்வ இணையதளம் உருவாக்குவதற்கு வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யும் போது பெறுகை வழிகாட்டல் நடைமுறைப் பிரகாரம் கடைபிடிக்கப் பட்டிருக்காததுடன், மா நகர சபையினால் அந்த இணையதளத்தின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுகை நடைமுறை ஒன்று முறைப் பிரகாரம் கடைபிடிப்பதற்கு மற்றும் இணையதள த்தின் உரிமையை உரித்தாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது அவசர தேவையின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்ட கருமம் ஒன்று ஆததால் தவறுதலாக பெறுகை தீர்மான ங்களை பதிவு செய்வதற்கு முடியாமல் போனதுடன், உரிமையை உரித்தாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி 06 மாதங் களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் அடங்கியுள்ள பரிந்துரைகளை செயற்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டில் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வாளரினால் வரையறுக்கப்பட்ட பரப்பில் மேற் கொள்ளப்பட்ட கணக்காய்வு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் சுட்டிக் காட்டிய பரிந்துரைகளை முகாமைத்துவத் தினால் செயற்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன்படி உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |